# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2143 - 2019 සැප්තැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2019.09.27

*2143 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | – |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 208 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, ஒற்றோபர் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

207-B81563-353 (2019/09)

# நானாவித அறிவித்தல்கள்

## 1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க விவாக (பொது) கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், 1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, விவாக (பொது) கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த 1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க விவாக (பொது) கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

01. தனியார் சட்டங்களை ஒழிப்பதன் மூலம் இலங்கையர்கள் அனைவரும் "சட்டவிதி" இன் கீழ் ஒருங்கிணைந்த சட்ட அமைப்பினால் நிர்வகிக்கப்படுதலை உறுதிப்படுத்தல்;

02. தனியார் சட்டங்களின் செயற்பாடு சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அடிப்படை உரிமையை மீறுகின்றது. இந்த சட்டம் மூலம் மீண்டும் அந்த உரிமையின் செயற் திறனை உருவாக்குதல்;

03. பல இலங்கையர் நியாயமற்ற திருமணம், விவாகரத்து மற்றும் தனியார் சட்டத்தின் கீழுள்ள சமய திருவுரிமைகளினால் பாதிக்கப்படுகின்றனர். அவை இன, மத மற்றும் பிரதேசவாரியாக இயங்குகின்றன. இந்த சட்டம் மூலம் அவர்களுக்கு நீதியை வழங்குதல்;

பிறவும்.

வண. அத்துரலியே ரத்தன தேரர்,
பாராளுமன்ற உறுப்பினர்.

09-1000/1

---

## 1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்து கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், 1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்து கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த 1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்து கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

01. தனியார் சட்டங்களை ஒழிப்பதன் மூலம் இலங்கையர்கள் அனைவரும் "சட்டவிதி" இன் கீழ் ஒருங்கிணைந்த சட்ட அமைப்பினால் நிர்வகிக்கப்படுதலை உறுதிப்படுத்தல்;

02. தனியார் சட்டங்களின் செயற்பாடு சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அடிப்படை உரிமையை மீறுகின்றது. இந்த சட்டம் மூலம் மீண்டும் அந்த உரிமையின் செயற் திறனை உருவாக்குதல்;

03. பல இலங்கையர் நியாயமற்ற திருமணம், விவாகரத்து மற்றும் தனியார் சட்டத்தின் கீழுள்ள சமய திருவுரிமைகளினால் பாதிக்கப்படுகின்றனர். அவை இன, மத மற்றும் பிரதேசவாரியாக இயங்குகின்றன. இந்த சட்டம் மூலம் அவர்களுக்கு நீதியை வழங்குதல்;

பிறவும்.

வண. அத்துரலியே ரத்தன தேரர்,
பாராளுமன்ற உறுப்பினர்.

09-1000/2

## 1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க திருமண, விவாகரத்து (கண்டிய) கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், 1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க திருமண, விவாகரத்து (கண்டிய) கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த 1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க திருமண, விவாகரத்து (கண்டிய) கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.*

*01. தனியார் சட்டங்களை ஒழிப்பதன் மூலம் இலங்கையர்கள் அனைவரும் "சட்டவிதி" இன் கீழ் ஒருங்கிணைந்த சட்ட அமைப்பினால் நிர்வகிக்கப்படுதலை உறுதிப்படுத்தல்;*

*02. தனியார் சட்டங்களின் செயற்பாடு சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அடிப்படை உரிமையை மீறுகின்றது. இந்த சட்டம் மூலம் மீண்டும் அந்த உரிமையின் செயற் திறனை உருவாக்குதல்;*

*03. பல இலங்கையர் நியாயமற்ற திருமணம், விவாகரத்து மற்றும் தனியார் சட்டத்தின் கீழுள்ள சமய திருவுரிமைகளினால் பாதிக்கப்படுகின்றனர். அவை இன, மத மற்றும் பிரதேச வாரியாக இயங்குகின்றன. இந்த சட்டம் மூலம் அவர்களுக்கு நீதியை வழங்குதல்;*

*பிறவும்.*

*வண. அத்துரலியே ரத்தன தேரர்,*
*பாராளுமன்ற உறுப்பினர்.*

*09-1000/3*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.